සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	**වාණිජ කලාව හා ගණකාධිකරණය - I**	කාලය நேரம் Time: 3 මණිත්තියාලංකාර්

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

මේලතික වාසිප්පු නේරම්: 10 නිමිඩංකළ්. *විණාප්පත්තිරත්තෛ වාසිත්තු විණාක්කළෛ තෙරිවු සෙය්වතර්කුම් විටෛ එළුතුම්පෝතු මුන්නුරිමෛ වළංකුම් විණාක්කළෛ ඔළුංකමෛත්තුක් කොළ්වතර්කුම් මේලතික වාසිප්පු නේරත්තෛ පයන්පටුත්තුක.*

අරිවුරුත්තල්කළ්:

- ***එල්ලා*** *විණාක්කළුක්කුම් විටෛ තරුක.*
- *1 තොටක්කම් 40 වරෙයුළ්ළ විණාක්කළ් ඔව්වොන්රිලුම් (1),(2),(3),(4) එන ඉලක්කමිටප්පට්ට විටෛකළිල් **සරියාන** අල්ලතු **මිකප් පොරුත්තමාන** විටෛයෛත් තෙරිවු සෙය්ක.*
- *උමක්කු වළංකප්පට්ටුළ්ළ විටෛත්තාළිල් ඔව්වොරු විණාවුක්කුම් උරිය වට්টঙ්කළිල් උමතු විටෛයින් ඉලක්කත්තෛ ඔත්ත වට්টත්තින් උළ්ළේ **පුළ්ළටියෛ (X)** ඉටුක.*
- *අන්ත විටෛත්තාළിන් පින්නාල් තරප්පට්টුළ්ළ මර්රෛය අරිවුරුත්තල්කළෛයුම් කවනමාකක් වාසිත්තු, අවර්රෛයුම් කටෛප්පිටික්කවුම්.*

- *පින්වරුම් සම්පවත්තෛ අටිප්පටෛයාකක් කොණ්ටු ඉල. 01 තොටක්කම් 5 වරෙයාන විණාක්කළුක්කු විටෛයළික්කවුම්.*

සන්තළලිය මකා විත්තියාලයත්තින් පාටසාලෛක් කූට්টුරවුච් සංකම්, පළෛය මාණවර් සංකම් මර්රුම් පාටසාලෛ මුකාමෛත්තුවක් කුළු ආසිරියර්කළින් කෝරික්කෛක්කු අමෛය, පිරතේසත්තින් තනවන්තර් වර්ත්තකරාන සාර්ල්ස් අවර්කළාල්, විවසායිකළිටම් ඉරුන්තු කොළ්වනවු සෙය්යප්පට්ට පුතිය තානියංකළෛප් පයන්පටුත්তි, අවරතු වණිකත්තාල් තයාරික්කප්පටුම් 'හෙල්ත් පට්ටි' එනුම් පිස්කට් පාටසාලෛක්කු නන්කොටෛයාක වළංකප්පටුකින්රන. ඉන්ත පෝෂාක්කළික්කුම් තානිය පිස්කට්කළුක්කු මාණවර්කළ් අතික විරුප්පත්තෛක් කාට්টුකින්රනර්.

1. සන්තළලිය මකා විත්තියාලයම් පූර්ත්ති සෙය්යුම් මනිත තේවෛ එතු?

(1) සුකාතාරම් *(2) උණවු* *(3) කල්වි* *(4) තොටර්පාටල්*

2. සන්තළලිය මකා විත්තියාලයත්තින් වෙළිච් සූළල් කාරණික්කු ඕර් උතාරණමාක අමෛවතු එතු?

(1) පාටසාලෛ මාණවර්කළ් *(2) පාටසාලෛ ආසිරියර්කළ්*
(3) අතිපර් *(4) හෙල්ත් පට්ටි වණිකම්*

3. මේලේ උළ්ළ සම්පවත්තිල් අටංකියුළ්ළ පොතුත්තුරෛ අමෛප්පු එතු?

(1) සන්තළලිය මකා විත්තියාලයම්. *(2) හෙල්ත් පට්ටි වණිකම්.*
(3) පළෛය මාණවර් සංකම්. *(4) පාටසාලෛක් කූට්டුරවුච් සංකම්.*

Past Papers Wiki

4. மேலே உள்ள சம்பவத்தில் அடங்கியுள்ள போஷாக்களிக்கும் பிஸ்கட் தயாரிக்கப் பயன்படுத்திய தானியம் உள்ளடங்கும் உற்பத்தி காரணி எது?

(1) நிலம்
(2) உழைப்பு
(3) மூலதனம்
(4) முயற்சி

5. மேலே உள்ள சம்பவத்தில் அடங்கியுள்ள ஹெல்த் பட்டி வணிகம் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இந்த வணிகத்திற்கு சட்ட ஆளுமை உள்ளது.
(2) இந்த வணிகத்தின் உரிமையாளரான சார்ள்ஸ் அவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.
(3) இந்த வணிகம் இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாத வணிகமாகும்.
(4) இந்த வணிகத்தின் பெயரைப் பதிவு செய்வது கட்டாயமாகும்.

6. வரையறுக்கப்பட்ட கோடகொடை பல்சேவைக் கூட்டுறவுச் சங்கம் ..... (1) ..... துறையின் .....(2)..... வணிக அமைப்பாகும்.

மேலே உள்ள 1 மற்றும் 2 இடங்களுக்குப் பொருத்தமான சரியான சொற்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) தனியார், இலாபத்தை நோக்கமாகக் கொண்ட
(2) தனியார், இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாத
(3) பொது, இலாபத்தை நோக்கமாகக் கொண்ட
(4) பொது, இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாத

7. பின்வரும் கூற்றுகளில் சில்லறை வியாபாரத்தைக் காட்டும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) டொன் கரோலிஸ் மரத் தளபாட வியாபாரியால், ஒரு கருங்காலி அலுமாரியை மொறட்டுவ மரத் தளபாட கடைக்கு விற்பனை செய்தல்.
(2) ஒரு உணவகத்திற்கு 3 Kg கேக்கினை கொள்வனவு செய்தல்.
(3) பீரளு கைப்பின்னல் மூலம் வடிவமைக்கப்பட்ட ஆடையொன்றை லக்ஸலைக்கு விற்பனை செய்தல்.
(4) ரன்தரு விளையாட்டுக் கழகத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் தானசாலைக்காக 250 Kg அரிசியை விற்பனை செய்தல்.

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இல. 8 மற்றும் 9 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஹிக்கடுவ இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கு வைத்துள்ள ரஸிக ரூ. 100,000 பெறுமதியான காசோலை ஒன்றை பத்தேகம இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கு வைத்துள்ள மிஹிரி பெரேராவுக்கு வழங்கினார்.

8. மேலே உள்ள சம்பவத்துடன் தொடர்புடைய கட்டளையிடுபவர் யார்?

(1) மிஹிரி பெரேரா
(2) ஹிக்கடுவ இலங்கை வங்கி
(3) ரஸிக
(4) பத்தேகம இலங்கை வங்கி

9. காசோலை தொடர்பாகக் காட்டப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – காசோலைக்கு கூடிய பாதுகாப்புப் பெறுவதற்காக காசோலையில் குறுக்குக் கோடிடப்படும்.

B - அனைத்து வணிக வங்கிகளாலும் வழங்கப்படும் காசோலைகளில் காந்த மைப்புலம் காணப்படும்.

மேலே உள்ள கூற்றுக்கள் தொடர்பான சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) A மாத்திரம் உண்மை.
(2) B மாத்திரம் உண்மை.
(3) A மற்றும் B ஆகிய இரண்டு கூற்றுக்களும் உண்மை.
(4) A மற்றும் B ஆகிய இரண்டு கூற்றுக்களும் உண்மை இல்லை.

10. அதிவேக வீதிப் போக்குவரத்துக்காக சொகுசு பேருந்துகள் 100 ஐ மெட்ரோ பஸ் நிறுவனம் கொள்வனவு செய்தது. இந்தக் கூற்றில் உள்ளடங்கும் சொகுசு பேருந்துகளும் அதிவேக மார்க்கமும் உள்ளடங்கும் போக்குவரத்து கூறுகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) மார்க்கம், தரிப்பிடம்
(2) ஊடகம், வலு
(3) வலு, மார்க்கம்
(4) ஊடகம், மார்க்கம்

11. ஆயுள் காப்புறுதி தொடர்பாகப் பொருத்தமற்ற கோட்பாட்டைத் தெரிவு செய்க.

(1) உயர் நம்பிக்கை
(2) காப்புறுதி செய்யத்தக்க உரிமை
(3) இழப்பீட்டுத் தத்துவம்
(4) பங்களிப்பு

12. விற்பனை முகாமையாளர் ஒருவரால் நுகர்வோரான அஞ்சுலவுக்கு கழிவுடன் கூடிய கட்டளை செய்வதற்கான இறுதித் திகதியைக் குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்தி அனுப்புதல்.
மேலே உள்ள கூற்றில் அடங்கியுள்ள தகவல் தொடர்பின் மூலக்கூறுகள் யாவை?

(1) அனுப்புனர், பெறுனர் மற்றும் செய்தி.
(2) செய்தி, துலங்கல் மற்றும் பின்னூட்டம்.
(3) ஊடகம், செய்தி மற்றும் பின்னூட்டம்.
(4) அனுப்புனர், பெறுனர் மற்றும் துலங்கல்.

13. காலி கலாசார நாடக விழா ஒழுங்கமைப்புக் குழுவால் செய்யப்பட்ட சில நடவடிக்கைகள் கீழே காட்டப்படுகின்றன.

A - வருடாந்த கலாசார நாடக விழா ஒக்டோபர் 13 ஆம் திகதி நடாத்தத் தீர்மானித்தல்.
B - நாடகக் குழுவின் சோர்வைத் தவிர்க்க தினசரிப் பயிற்சிக் கருமங்களில் ஈடுபடுத்தல்.
C - கலாசார நாடகத் தீர்ப்பு வழங்குவதற்காகத் நடுவர் குழுவைத் தெரிவு செய்தல்.
D - திட்டமிட்ட கால அட்டவணைப்படி விழா செயற்பாடுகளை முடித்தல்.

மேலே உள்ள நடவடிக்கைகளில் முகாமைத்துவ கருமங்களின் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் ஒழுங்குமுறையில் காட்டப்படுவது,

(1) A மற்றும் B மூலமாகும்.
(2) A மற்றும் C மூலமாகும்.
(3) B மற்றும் C மூலமாகும்.
(4) A மற்றும் D மூலமாகும்.

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இல. 14 மற்றும் 15 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

சிறுவர்களுக்கு தரமான இனிப்பு வகைகளை விற்பனை செய்யும் 'ரச மந்துர' வணிகம் அண்மைக்காலமாக குறைந்த விலையில் மற்றும் நவீன பொதியிடலில் இனிப்பு வகைகளை விற்பனை செய்யும் 'மிஹிரி ஸ்வீட்ஸ்' என்ற புதிய கடை அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டதால் சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளது. இதனால் 'ரச மந்துர'வின் உரிமையாளர் தனிப்பட்ட விற்பனை வேலைத்திட்டத்தின் கீழ் விசேட 'உறுப்பினர் அட்டைகள்' (Loyalty Card Program) ஒன்றை அறிமுகப்படுத்தினார்.

14. 'ரச மந்துர' வணிகத்தில் தாக்கம் செலுத்தும் இலக்கு சந்தை எது?

(1) சிறுவர்கள்
(2) ஊழியர்கள்
(3) போட்டியாளர்கள்
(4) முகாமையாளர்கள்

15. 'ரச மந்துர' வணிகத்தின் சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளில் ஒன்றான மேம்படுத்தலுக்கு ஓர் உதாரணமாக அமைவது,

(1) இலகு கொடுப்பனவு முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல்.
(2) 'உறுப்பினர் அட்டைகள்' விசேட வேலைத்திட்டம்.
(3) 'மிஹிரி ஸ்வீட்ஸ்' என்ற புதிய கடையை ஆரம்பித்தல்.
(4) இனிப்பு உற்பத்திகளை விற்பனை செய்தல்.

16. ஜெயந்தாவிடம் இருந்த ரூ. 400,000 பணத்தை வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் சாதாரண பங்குகளின் முதலீடு செய்தார். 2024 ஆம் ஆண்டில் அந்தக் கம்பனி உழைத்த இலாபத்திலிருந்து ரூ. 22,000 அவருக்குக் கிடைத்தது. பின்னர் எல்லாப் பங்குகளையும் ரூ. 550,000 இற்கு விற்கப்பட்டன. இந்த முதலீட்டிலிருந்து ஜெயந்தா உழைத்த பிரதிபலன்களைக் குறிக்கும் சொற்களை ஒழுங்குமுறைப்படி காட்டப்படும் விடையைத் தெரிவு செய்க.

(1) வட்டியும் மூலதன இலாபமும்
(2) பங்கிலாபமும் மூலதன இலாபமும்
(3) பங்கிலாபமும் வட்டி வருமானமும்
(4) இலாபமும் மூலதன இலாபமும்

17. ஒரு வணிகத்தின் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) கொடுக்கல் வாங்கலின் பெறுமதியை கொடுக்கல் வாங்கல் நடைபெறும் சந்தர்ப்பத்திலேயே தீர்மானம் செய்ய வேண்டும்.
(2) கொடுக்கல் வாங்கல்களாகக் கவனத்தில் கொள்ளப்படுவது உடன் காசுக்கு மாத்திரம் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் ஆகும்.
(3) ஒரு வணிகத்திற்கும் ஏனைய தரப்பினருக்கும் இடையில் இடம்பெறும் வளங்களின் பரிமாற்றம் கொடுக்கல் வாங்கல் ஆகும்.
(4) கொடுக்கல் வாங்கல்கள் மூலம் தோன்றுவது சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமைகள் மாத்திரம் ஆகும்.

18. கீழே காட்டப்படும் சொத்துக் கணக்குகளில் நடைமுறைச் சொத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

A – காசு B – வாகனங்கள் C – தளபாடம்
D - கடன்பட்டோன் E - வங்கி மீதி F - முன்னரே செலுத்திய செலவுகள்

(1) A, B, D, E (2) D, C, E, F (3) A, D, E, F (4) A, C, E, F

19. வணிகத்தின் சொத்துக்களில் மட்டும் தாக்கம் செலுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?

(1) ரூ. 31,000 கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்துதல்.
(2) ரூ. 15,000 பெறுமதியான தொகையை கடனுக்கு விற்பனை செய்தல்.
(3) ரூ. 20,000 பெறுமதியான இருப்புக்களை ரூ. 25,000 இற்கு விற்பனை செய்தல்.
(4) ரூ. 50,000 ஐ உரிமையாளரால் மேலதிக மூலதனமாகக் கொண்டு வருதல்.

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 20 மற்றும் 21 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

சாலிந்தவின் வணிகத்தின் 2025 பெப்ரவரி மாதத்தில் நடந்த சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்படுகின்றன.

A - ரூ. 35,000 பெறுமதியான இருப்புக்களைக் கொள்வனவு செய்தல்.
B - ரூ. 20,000 கிரயமான இருப்புக்களை ரூ. 28,000 இற்கு விற்பனை செய்தல்.
C - உரிமையாளரால் வணிகத்தின் தொலைபேசிக் கட்டணம் ரூ. 5,000 தனிப்பட்ட பணத்திலிருந்து செலுத்துதல்.
D - ரூ. 13,000 கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்துதல்.

20. சாலிந்தவின் வணிகத்தின் உரிமையாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தலும் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்ட விடையாக அமைவது,

(1) B மாத்திரம். (2) A மற்றும் B மாத்திரம்.
(3) B, C மற்றும் D மாத்திரம். (4) B மற்றும் C மாத்திரம்.

21. சாலிந்தவின் வணிகத்தின் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதியன்று மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூ. 54,000 ஆக இருந்ததெனில், மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கு முன்னர் மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி எவ்வளவு?

(1) 33,000 (2) 67,000. (3) 32,000. (4) 41,000.

22. தளபாட வணிகமொன்றில் இயந்திரங்களின் பெறுமதி ..(1).. ஆகவும் தளபாடம் .....(2)... ஆகவும் காணப்படும்.

மேலே உள்ள 1 மற்றும் 2 இடங்களுக்குப் பொருத்தமான சரியான சொற்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

PAST PAPERS WIKI

(1) சொத்துக்கள், பொறுப்பு
(2) நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்
(3) சொத்துக்கள், உரிமைகள்
(4) நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள்

23. நுவன் வணிகத்தில் நடந்த சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்படுகின்றன.

A - ரூ. 8,000 மின் கட்டணம் செலுத்துதல்.
B - ரூ. 10,000 கடன்கொடுத்தோர்களுக்குச் செலுத்துதல்.
C - ரூ. 30,000 இற்கு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.
D - ரூ. 100,000 வங்கிக் கடன் பெறுதல்.

மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களுள் கொடுப்பனவு கைச்சாத்தினை மூல ஆவணமாகப் பயன்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் எவை?

(1) A, C மற்றும் D (2) A மற்றும் B (3) B, C மற்றும் D (4) A, B மற்றும் C

24. ரூ. 44,000 இற்கு இருப்புக்கள் கடனுக்கு விற்பனை செய்தல் தொடர்பான சரியான இரட்டைப் பதிவு,

(1) கடன்பட்டோன் கணக்கு வரவு 44,000, விற்பனை கணக்கு செலவு 44,000
(2) கடன்கொடுத்தோன் கணக்கு வரவு 44,000, விற்பனை கணக்கு செலவு 44,000
(3) காசுக் கணக்கு வரவு 44,000, கடன்பட்டோன் கணக்கு செலவு 44,000
(4) காசுக் கணக்கு வரவு 44,000, விற்பனை கணக்கு செலவு 44,000

25. பசிந்துவின் வணிகத்தின் சில்லறை காசு வசக்கட்டு ரூ. 15,000 ஆகும். ஏப்ரல் மாதம் முதல் வசக்கட்டை ரூ. 2,000 ஆல் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. மார்ச் மாதத்தின் சில்லறை காசுச் செலவுகளின் மொத்தம் ரூ. 13,100 ஆக இருந்ததெனில், ஏப்ரல் 1 ஆம் திகதி மீள் நிரப்பல் செய்யப்பட வேண்டிய பணம் எவ்வளவு?

(1) ரூ. 13,100 ஆகும். (2) ரூ. 15,100 ஆகும்.
(3) ரூ. 15,000 ஆகும். (4) ரூ. 17,000 ஆகும்.

26. வங்கிக் கணக்கின் மீதிக்கும் வங்கிக் கூற்றின் மீதிக்கும் இடையில் சமநிலை இல்லாத சந்தர்ப்பத்தில், வங்கிக் கணக்கின் மீதியைத் திருத்தம் செய்யும் போது பயன்படுத்தும் உருப்படிகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) வசூலிக்கப்படாத காசோலைகள், நேரடி வைப்புக்கள், நிலையியற் கட்டளை மூலம் செலுத்துதல்
(2) கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள், வங்கிக் கட்டணம்
(3) நேரடி வைப்புக்கள், வங்கி அறவிட்ட கட்டணம், நிலையியற் கட்டளை மூலம் செலுத்துதல்
(4) வங்கி அறவிட்ட கட்டணம், கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலை, கடன்பட்டோன் நேரடி வைப்பு

27. கடன்பட்டோன் ஒருவரிடமிருந்து பெற்ற ரூ. 30,000 காசோலையை அன்றைய தினமே வங்கியில் வைப்புச் செய்தமை தொடர்பான இரட்டைப் பதிவு எது?

(1) காசுக் கணக்கு வரவு ரூ. 30,000, கடன்பட்டோன் கணக்கு செலவு ரூ. 30,000
(2) வங்கிக் கணக்கு வரவு ரூ. 30,000, காசுக் கணக்கு செலவு ரூ. 30,000
(3) வங்கிக் கணக்கு வரவு ரூ. 30,000, கடன்பட்டோன் கணக்கு செலவு ரூ. 30,000
(4) வங்கிக் கணக்கு வரவு ரூ. 30,000, விற்பனை கணக்கு செலவு ரூ. 30,000

28. ஒரு கணக்கீட்டு வழுவைச் சரிசெய்வதற்காக இடப்பட்ட இரட்டைப் பதிவு கீழே காட்டப்பட்டுள்ளது.

காசுக் கணக்கு வரவு ரூ. 21,000

மின்சாரச் செலவுகள் கணக்கு செலவு ரூ. 21,000

இங்கு இடம்பெற்றிருக்கக் கூடிய வழுவாகக் கருதக்கூடியது,

(1) ரூ. 21,000 மின்சாரச் செலவுகள் இருமுறை கணக்குகளில் பதியப்பட்டமை.

(2) ரூ. 21,000 மின்சாரச் செலவுகள் செலுத்துதல் கணக்குப் புத்தகங்களில் பதியப்படாதமை.

(3) ரூ. 21,000 மின்சாரச் செலவுகள் பரீட்சை மீதியில் பதியப்படாமல் இருந்தமை.

(4) ரூ. 21,000 மின்சாரச் செலவுகள் காசேட்டில் மாத்திரம் பதியப்பட்டமை.

29. பரீட்சை மீதியின் சமப்பாட்டினைப் பாதிக்கும் வழு எது?

(1) ரூ. 15,000 கட்டட வாடகை செலுத்துதல் கட்டடங்கள் கணக்கில் பதியப்படாமல் இருந்தமை.

(2) ரூ. 50,000 விற்பனைகள் கணக்குகளில் இருமுறை பதியப்பட்டமை.

(3) ரூ. 25,000 சம்பளம் செலுத்துதல் ரூ. 2,500 ஆக மூல ஆவணத்தில் பதியப்பட்டமை.

(4) அலுவலக உபகரணக் கணக்கு மீதி ரூ. 200,000 பரீட்சை மீதியில் செலவு பக்கத்தில் பதியப்பட்டமை.

30. சுமித்துரோ சுகத சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 100 ஆகும். ஒரு அங்கத்தவரின் மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 200 ஆகும். 2024 ஆம் ஆண்டுக்கான 15 அங்கத்தவர்கள் அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை.

2025 ஆம் ஆண்டு வருமானக் கூற்றில் உள்ளடங்க வேண்டிய அங்கத்துவக் கட்டணம் எவ்வளவு?

(1) ரூ. 17,000 ஆகும். (2) ரூ. 20,000 ஆகும். (3) ரூ. 204,000 ஆகும். (4) ரூ. 240,000 ஆகும்.

31. பிரகதி விளையாட்டுக் கழகத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கில் உள்ளடங்கும், ஆனால் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படாத உருப்படிகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) விளையாட்டுக் கருவிகள் கொள்வனவு செய்தல், எதிர்வரும் ஆண்டுக்காகப் பெற்ற உறுப்பினர் பணம்.

(2) விளையாட்டுக் கருவிகள் தேய்மானம், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.

(3) அட்டுறு கட்டட வாடகை, விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.

(4) நன்கொடை பெறுகைகள், வருடாந்த உறுப்பினர் பணம்.

32. கீழே உள்ள அட்டவணையில் X நிரலில் ஆடை உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடைய செலவுகள் சிலவும், Y நிரலில் உற்பத்தி கிரயத்தின் மூலக்கூறுகள் சிலவும் காட்டப்படுகின்றன.

X	Y
1. ஆடை நிறுவனத்தின் கட்டட வாடகை	A. நேரில் கூலிக் கிரயம்
2. ஆடை வடிவமைப்பாளரின் சம்பளம்	B. ஏனைய நேர் செலவுகள்
3. காவலாளியின் சம்பளம்	C. நேர் கூலிக் கிரயம்
4. தையல் இயந்திரம் இயக்குபவர்களின் சம்பளம்	D. ஏனைய நேரில் செலவுகள்

மேலே உள்ள X நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு இனங்களை Y நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி கிரய கூறுகளுடன் ஒழுங்குமுறையில் பொருத்தும் போது சரியான விடை எது?

(1) 1-D, 2-B, 3-A, 4-C (3) 1-D, 2-A, 3-B, 4-C (2) 1-A, 2-C, 3-D, 4-B (4) 1-B, 2-D, 3-C, 4-D

33. மூலக் கிரயத்தின் மூலக்கூறுகளைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) நேர்ப் பொருள் கிரயம் + நேர்க் கூலிக் கிரயம் + மேந்தலைக் கிரயம்
(2) நேர்ப் பொருள் கிரயம் + நேர்க் கூலிக் கிரயம் + ஏனைய நேரில் செலவுகள்
(3) நேர்ப் பொருள் கிரயம் + நேர்க் கூலிக் கிரயம் + ஏனைய நேர் செலவுகள்
(4) நேரில் பொருள் கிரயம் + நேரில் கூலிக் கிரயம் + ஏனைய நேரில் செலவுகள்

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி இல. 34 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

கவிந்தாவினால் 2024.01.01 ஆம் திகதி ரூ. 500,000 முதலீடு செய்து ஆரம்பிக்கப்பட்ட வணிகத்தின் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்குரிய சில தகவல்கள் கீழே காட்டப்படுகின்றன.

வருமானம்	**ரூ.**
விற்பனைகள்	500,000
பெற்ற கட்டட வாடகை	12,000
செலவுகள்	
வங்கிக் கடன் வட்டி	5,000
விளம்பரச் செலவுகள்	2,000
மின்சாரச் செலவுகள்	15,000
ஊழியர் சம்பளம்	20,000
வரிகள்	4,000
கடன் கொள்வனவுகள்	180,000
காசுக் கொள்வனவுகள்	100,000

2024.12.31 உள்ளவாறான வணிகத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கீழே காட்டப்படுகின்றன.

	ரூ.
சொத்துக்கள்	
காணி மற்றும் கட்டடங்கள்	400,000
இருப்புகள்	15,000
அலுவலக உபகரணங்கள் (கிரயத்தில்)	20,000
கடன்பட்டோன்	18,000
முதலீடுகள்	155,000
காசு மீதி	30,000
பொறுப்புக்கள்	
கடன்கொடுத்தோன்	50,000
10% வங்கிக் கடன்	80,000
அட்டுறு மின் கட்டணம்	8,000

மேலதிக தகவல்கள்: அலுவலக உபகரணங்கள் 10% ஆல் வருடாந்தம் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

34. கவிந்தாவின் வணிகத்தின் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான விற்பனை கிரயம்,

(1) ரூ. 205,000 (2) ரூ. 235,000 (3) ரூ. 240,000 (4) ரூ. 265,000

35. கவிந்தாவின் வணிகத்தின் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய இலாபம்,

(1) ரூ. 56,000 (2) ரூ. 67,000 (3) ரூ. 188,000 (4) ரூ. 216,000

36. கவிந்தாவின் வணிகத்தின் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட இலாப நட்டக் கூற்றில் காட்டப்படும் நிர்வாகச் செலவுகளின் மொத்தம் எவ்வளவு?

(1) ரூ. 43,000
(2) ரூ. 49,000
(3) ரூ. 51,000
(4) ரூ. 61,000

37. கவிந்தாவின் வணிகத்தின் நடைமுறைச் சொத்துக்களின் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதிகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ரூ. 63,000, ரூ. 61,000
(2) ரூ. 33,000, ரூ. 61,000
(3) ரூ. 48,000, ரூ. 58,000
(4) ரூ. 63,000, ரூ. 53,000

38. 2024.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படும் கடன் வட்டியின் பெறுமதி எவ்வளவு?

(1) ரூ. 8,000
(2) ரூ. 5,000
(3) ரூ. 3,000
(4) ரூ. 13,000

39. 2024.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு?

(1) ரூ. 18,000
(2) ரூ. 20,000
(3) ரூ. 400,000
(4) ரூ. 418,000

40. 2024.12.31 ஆம் திகதியன்று கவிந்தாவின் வணிகத்தின் உரிமை எவ்வளவு?

(1) ரூ. 500,000
(2) ரூ. 600,000
(3) ரூ. 688,000
(4) ரூ. 686,000

****

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	**වාණිජ විෂය හා ගිණුම්කරණය - II**	කාලය நேரம் Time

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

අවධානයට:

முதலாம் *வினா உட்பட* ***பகுதி*** I *இலிருந்து* ***இரண்டு*** *வினாக்களையும்,* ***பகுதி*** II *இலிருந்து* ***இரண்டு*** *வினாக்களையும், தெரிவு செய்து, எல்லாமாக* ***ஐந்து*** *வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*

- *පහත සඳහන් සිද්ධිය අනුව (i) සිට (x) දක්වා ඇති ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.*

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் சனுல், தொழினுட்பக் கல்லூரியினால் நடத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடனான மரவேலை டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்தார். அதைத் தொடர்ந்து, தனது தந்தையிடமிருந்து பெற்ற ரூ. 500,000 மூலதனத்தை ஈடுபடுத்தி, தனது வீட்டினருகே அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வேலைத்தளத்தில் தளபாட உற்பத்தி செய்யும் வணிகத்தை ***சனுல் பர்னிச்சர்*** *என்ற பெயரில் 2025.01.01 அன்று ஆரம்பித்தார். மரத்தை மெருகூட்டுவதற்குத் தேவையான ரூ. 60,000 பெறுமதியான இயந்திரம் ஒன்று அன்றைய தினமே அவரது சகோதரரால் அவருக்கு வழங்கப்பட்டது. 2025.01.01 அன்று 8% வருடாந்த வட்டிக்கு ரூ. 900,000 கடனை பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டார்.*

படைப்பாற்றல் திறன்களைக் கொண்ட சனுல், எப்போதும் நவீன வடிவங்களுக்கு ஏற்ப தளபாடங்களை உற்பத்தி செய்வதால், அவருடைய தயாரிப்புகளுக்கு அதிக கேள்வி நிலவுகிறது. இதனால் அவர், நகர மத்தியில் தளபாட விற்பனைக் கண்காட்சியகம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்தார். மேலும், தற்காலிக வேலைத்தளத்திற்குப் பதிலாக ரூ. 1,000,000 பெறுமதியான நிரந்தர கட்டடமொன்றை கொள்வனவு செய்ததுடன், ஒரு தச்சுத் தொழிலாளியையும் இணைத்துக் கொண்டார்.

தளபாடங்களின் விலை அதிகம் என்பதால், தவணை முறையில் கொள்வனவு செய்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒரே தடவையில் பணம் செலுத்தினால் 10% கழிவு வழங்கப்படுகின்றது. தளபாடங்கள் குறித்த விளம்பரத்திற்காகப் பத்திரிகைகளும் இணையமும் பயன்படுத்தப்படுகின்றன.

2025.01.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன:

- *மரக்கட்டைகள் காசுக்கு கொள்வனவு 180,000*
- *கடன் கொள்வனவு 90,000*
- *போக்குவரத்துச் செலவு 25,000*
- *ஊழியர் சம்பளம் 120,000*
- *தளபாடங்கள் காசிற்கு விற்பனை 350,000*
- *மின் கட்டணம் 14,000*
- *குஷன் துணி 50,000*
- *போலிஷ் மற்றும் பிற பொருட்கள் 85,000*

- மணல் கடதாசி 10,000
- தளபாடங்கள் கடனுக்கு விற்பனை 300,000

மேலதிகத் தகவல்கள்:

1. மரத்தை மெருகூட்டும் இயந்திரத்துக்கு கிரயத்தில் வருடாந்தம் 5% வீதம் பெறுமானத் தேய்விடுதல் வேண்டும்.
2. வங்கிக் கடனுக்கான வட்டி 2025.01.31 வரை செலுத்தப்படாமல் இருந்தது.

1) (i) (அ) "சனுல் பர்னிச்சர்" வணிகத்தால் பூர்த்தி செய்யப்படும் விருப்பம் யாது?
(ஆ) உற்பத்தியின் தன்மைக்கு ஏற்ப இந்த வணிகம் எந்த வணிக வகையில் அடங்கும்? (பு 02)

(ii) (அ) மேலுள்ள சம்பவத்துடன் தொடர்புடைய உற்பத்தி காரணிகள் 02 ஐ உதாரணங்களுடன் குறிப்பிடுக.
(ஆ) "சனுல் பர்னிச்சர்" வணிகத்தின் அக்கறை செலுத்தும் தரப்பினர் 02 ஐ அவர்களின் நோக்கங்கள் சகிதம் குறிப்பிடுக. (பு 02)

(iii) (அ) "சனுல் பர்னிச்சர்" வணிகம் கொண்டுள்ள ஒரு பலத்தையும் ஒரு வாய்ப்பையும் எழுதுக.
(ஆ) மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் தொடர்பு ஊடகங்கள் 02 ஐ உதாரணங்களுடன் தருக. (பு 02)

(iv (அ) "சனுல் பர்னிச்சர்" வணிகத்தின் முகாமைத்துவக் கருமங்கள் 02 ஐ உதாரணங்களுடன் குறிப்பிடுக.
(ஆ) மேலுள்ள சம்பவத்துடன் தொடர்புடைய சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகள் 02 ஐ உதாரணங்களுடன் குறிப்பிடுக. (பு02)

(v) 2025.01.01 ஆம் திகதிக்கான இந்த வணிகத்தின் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைக் குறிப்பிடுக. (பு 02)

(vi) (அ) "சனுல் பர்னிச்சர்" வணிகத்தின் நேர்க் கிரயம் 02 ஐயும் நேரில் கிரயம் 02 ஐயும் உதாரணங்களுடன் குறிப்பிடுக.
(ஆ) சம்பவத்துடன் தொடர்புடைய மூல ஏடுகள் 02 ஐ உதாரணங்களுடன் குறிப்பிடுக. (பு 02)

(vii) மரத்தை மெருகூட்டும் இயந்திரத்திற்குப் பெறுமானத் தேய்வு செய்தல் தொடர்பான இரட்டைப் பதிவை தருக. (பு 02)

(viii) சனுல் பர்னிச்சர் வணிகத்தின் 2025.01.31 ஆம் திகதிக்கான காசு மீதி எவ்வளவு? (பு 02)

(ix) 2025.01.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய இலாபத்தைக் கணக்கிடுக.(பு 02)

(x) 2025.01.31 ஆம் திகதிக்கான சனுல் பர்னிச்சர் வணிகத்தின் உரிமையைக் கணக்கிடுக. (பு 02)

பகுதி – I – வணிகக் கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்)

2) (i) இலாபத்தை எதிர்பார்க்கும் வணிகங்களில் பொதுவாகக் காணக்கூடிய வணிக நோக்கங்கள் 02 ஐ எழுதுக. (பு 02)

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக. (பு 1/2x4 = 02)

(அ) தேவையை அடிப்படையாகக் கொண்டே விருப்பங்களும் தோன்றுகின்றன.
(ஆ) சர்வதேசத் தொடர்புகள் நாட்டின் பொருளாதாரச் சூழலுடன் தொடர்புடைய ஒரு காரணியாகும்.
(இ) இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சேவை வழங்கும் வணிகமாகும்.
(ஈ) அமைச்சின் கீழ் இயங்குவதும், முழுமையாக அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ள அமைப்பு திணைக்களங்கள் அல்ல.

(iii) தன்னுடைய சேமிப்புக் கணக்கிலுள்ள பணத்தை மூலதனமக ஈடுபடுத்தி காளான் வணிகம் நடத்தும் அசாத், வணிகக் கருமங்களை இலகுபடுத்துவதற்காக இரண்டு ஊழியர்களை இணைத்துக் கொண்டார். அவரது உற்பத்திகளைப் அப்பிரதேச நுகர்வோர்கள் கொள்வனவு செய்கின்றனர். இச் சம்பவத்துடன் தொடர்புடைய வணிகச் சூழல்கள் 02 ஐப் பெயரிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் வீதம் தருக.

(விடைகள் எழுதக் கீழே உள்ள மாதிரி அட்டவணையைப் பயன்படுத்தவும்.) *(பு 02)*

வணிகச் சூழல்	**உதாரணம்**
1.	
2.	

(iv) சஹான் பெரிய விதை கொண்ட வேர்க்கடலைகளை " சஹான் கடலை" எனும் பெயரில் பொதியிட்டு விற்பனை செய்கிறார். கடலை அறுவடையின் ஒரு பகுதியை அவர் பிரதேசத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கும் வழங்குகிறார்.

(அ) மேலுள்ள சம்பவத்திற்கமைய நோக்கத்தின் அடிப்படையில் வணிக அமைப்புகளை வகைப்படுத்திக் காட்டுக.

(ஆ) மேலுள்ள வகைப்படுத்தலுக்கு ஏற்ப சம்பவத்துடன் தொடர்புடைய உதாரணங்கள் ஒவ்வொன்றையும் எழுதுக. *(பு 02)*

3) *(i) சில்லறை வியாபாரத்தின் பண்புகள் 02 ஐக் குறிப்பிடுக.* *(பு 02)*

*(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.* *(பு 1/2x4 = 02)*

(அ) காசோலையை எழுதிக் கையொப்பமிடுபவர் கட்டளையிடுபவர் ஆவார்.

(ஆ) காப்புறுதிப் பாதுகாப்புப் பெறும் தரப்பினர், அதாவது காப்புறுதி செய்வோன் 2ஆம் பிரிவினராவர்.

(இ) பொருத்தமான தொடர்பாடல் ஊடகத்தைத் தெரிவு செய்யும் போது கிரயம் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

(ஈ) போக்குவரத்தின் அடிப்படை மூலகங்களாக நெடுஞ்சாலைகள், இரயில் பாதைகள், நீர்வழிகள் மற்றும் வான்வழிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

(iii) புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து ஆசிரியர்களுக்குத் தெளிவூட்டும் செயலமர்வு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்து கல்விப் பணிப்பாளர் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அதிகாரபூர்வமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

(அ) மேலுள்ள சம்பவத்துடன் தொடர்புடைய தொடர்பாடல் ஊடகத்தைக் குறிப்பிட்டு உதாரணம் தருக.

(ஆ) குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய துலங்கல் என்னவாக இருக்க முடியும்? *(பு 02)*

(iv) புகையிரத என்ஜினில் டீசல் எரிபொருள் நிரப்பப்பட்டு, வாரத்தின் ஒவ்வொரு நாளும் அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் அதிவேக 'இன்டர்சிட்டி' புகையிரதம் காங்கேசன்துறை நோக்கிச் செல்கிறது. போக்குவரத்து மூலகங்களான மார்க்கம், ஊடகம், சக்தி மற்றும் தரிப்பிடம் என்பவற்றுக்கான உதாரணங்களைச் சம்பவத்திலிருந்து வெவ்வேறாக எழுதுக.

(பு 02)

4) *(i) சொத்துக்களை கொள்வனவு செய்வதால் தனிநபருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் 02 ஐ தருக.*

(பு 02)

*(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.* *(பு 1/2x4 = 02)*

(அ) வணிக நோக்கங்களை எதிர்பார்த்த விதத்தில் நிறைவேற்றிக் கொள்வது விளைத்திறன் ஆகும்.

(ஆ) ஐந்து வருடங்களுக்குக் குறைவான குழந்தைகளுக்காக விஷேட பால்மா வகையொன்றை உற்பத்தி செய்தல் இலக்குச் சந்தைக்கு ஓர் உதாரணமாகும்.

(இ) கொழும்புப் பங்குச் சந்தையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

(ஈ) முதலீடு செய்த பணத்தைத் திரும்பப் பெறுவது தொடர்பாகத் திறைசேரி உண்டியல்களுக்குப் பூரண அரசாங்கப் பாதுகாப்பு உண்டு.

(iii) சூர்யா உணவு உற்பத்தி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட "ஃபிரஷ் அப்" (Fresh up) என்ற பழப்பான வகையொன்று சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்கள் இந்த உற்பத்தியைச் சந்தையில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்துவதற்காகக் கீழே உள்ள படிமுறைகளைப் பின்பற்றினர்.

A - பானம் ஒன்றின் விலை ரூ. 150 இற்கு விற்பனை செய்யத் தீர்மானித்தல்.

B - பானப் போத்தல்களின் காலாவதித் திகதியை அறிந்துகொண்ட பின்னர், விற்பனையின் போது 10% கழிவு வழங்குதல்.

C - 10 சிறப்புச் சந்தைகளுக்கு உற்பத்தியைப் விநியோகிப்பதற்குத் தேவையான போக்குவரத்துச் சேவை மற்றும் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தல்.

மேலுள்ள ஒவ்வொரு படிமுறையிலும் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவச் செயன்முறையின் கருமங்களையும் சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளையும் எழுதுக. (விடைகளை வழங்கக் கீழே உள்ள மாதிரி அட்டவணையைப் பயன்படுத்தவும். முதலாவது படிமுறை A தரப்பட்டுள்ளது) (பு02)

படிமுறை	முகாமைத்துவக் கருமம்	சந்தைப்படுத்தல் கலவையின் மாறி
A	திட்டமிடல்	விலை
B		
C		

(iv) விமல் வசம் இருந்த பணத்தில் ரூ. 150,000 ஐப் பங்குச் சந்தையில் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்யவும் ரூ. 200,000 ஐத் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யவும் பயன்படுத்தினார்.

(அ) மேலுள்ள முதலீடுகளில் இடர் கூடிய முதலீட்டு வழி எது?

(ஆ) மேலுள்ள ஒவ்வொரு முதலீட்டு வழியிலிருந்தும் விமலுக்குக் கிடைக்கும் அனுகூலங்களைப் பெயரிடுக. (பு 02)

II பகுதி – கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்)

5) (i) வருமானம் என்றால் என்ன? (பு 02)

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள உருப்படிகளைச் **சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமைகள், வருமானம், மற்றும் செலவு** என்ற தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துக. (பு 02)

(அ) வங்கிக் கடன்

(ஆ) விற்பனைகள்

(இ) மோட்டார் வண்டி பழுதுபார்த்தல் செலவு

(ஈ) பற்றுக்கள்

(iii) (அ) சிஹான் வணிகத்தில் நடந்த 02 கொடுக்கல் வாங்கல்கள், வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் செலுத்திய விதம் கீழே காட்டப்பட்டுள்ளன.

திகதி	கொடுக்கல் வாங்கல்	சொத்துக்கள்	=	உரிமைகள்	+	பொறுப்புக்கள்
2025.10.01	01	+50,000 (இருப்பு) -50,000 (காசு)				

2025.10.02	02	-30,000 (இருப்பு) +35,000 (கடன்பட்டோன்)		+5,000 (இலாபம்)		

மேலே உள்ள இரண்டு கொடுக்கல் வாங்கல்களையும் அதன் பெறுமதிகளுடன் குறிப்பிடுக. (பு 02)

(ஆ) நிலந்தியின் வணிகத்தின் 2024 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2024.01.01 திகதியுள்ளவாறான மூலதனம் ரூ. 600,000
- ஆண்டின் வருமானங்கள் ரூ. 150,000
- ஆண்டின் செலவுகள் ரூ. 100,000
- ஆண்டில் நிலந்தி வணிகத்துக்கு ஈடுபடுத்திய இட்ட மேலதிக மூலதனம் ரூ. 56,000
- ஆண்டில் நிலந்தியின் வணிகத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்கள் ரூ. 10,000

2024.12.31 ஆம் திகதிக்கான நிலந்தியின் உரிமையைக் கணக்கிடுக. (பு 02)

(iv) ஜயமாலின் வணிகத்தின் 2025.11.01 ஆம் திகதியுள்ளவறான காசுக் கணக்கு மீதி ரூ. 80,000 ஆகும். நவம்பர் மாதத்தில் நடந்த சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2025.11.02 கடன்பட்டோனான நிமனிடமிருந்து ரூ. 16,000 கிடைத்ததுடன், கழிவு 10% வழங்கப்பட்டது.
- 2025.11.08 கடன்கொடுத்தோனான சஹனுக்கு ரூ. 8,000 செலுத்திய போது பெற்ற கழிவு ரூ. 400 ஆகும்.
- 2025.11.20 ஊழியர் சம்பளம் ரூ. 40,000 செலுத்தப்பட்டது.
- 2025.11.25 காசு விற்பனைகள் ரூ. 30,000 ஆகும்.

வேண்டப்படுவது: ஜயமாலின் வணிகத்தின் கழிவு நிரல்களை கொண்ட காசேட்டைத் தயாரித்து 2025.11.30 ஆம் திகதிக்கான காசு மீதியைக் கணிக்க. (பு 04)

6) (i) வங்கிக் மேலதிக பற்று என்றால் என்ன? (பு 02)

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்வதற்குரிய மூல ஏடுகளைக் குறிப்பிடுக.

(அ) ரூ. 20,000 கட்டட வாடகை செலுத்துதல்.

(ஆ) வணிகத்தின் பாவனைக்காக ரூ. 200,000 பெறுமதியான கணினி இயந்திரம் கடனுக்குக் கொள்வனவு செய்தல்.

(பு 02)

(iii) (அ) துணிப்பைகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் 2025 அக்டோபர் மாதத்துடன் தொடர்புடைய சில தகவல்கள் கீழே காட்டப்படுகின்றன. (பு 02)

- மொத்த உற்பத்தி கிரயம் ரூ. 400,000
- உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பையின் கிரயம் ரூ. 800
- நேர்ப் பொருள் கிரயம் ரூ. 100,000
- நேர் கூலிக் கிரயம் ரூ. 100,000
- உற்பத்திப் மேந்தலைக் கிரயம் ரூ. 150,000

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி கீழே உள்ள மாதிரி அட்டவணையை பூரணப்படுத்துக.

மூலக் கிரயம்	
உற்பத்தி செய்யப்பட்ட பைகளின் எண்ணிக்கை	

(ஆ) புத்தினி வணிகத்தின் பயிலுனர் கணக்கு எழுதுநரால் சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிட்டுப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அவற்றை

Past Papers Wiki

ஆராய்ந்து கணக்குப் பதிவு செய்தலின் போது ஏற்பட்டுள்ள வழுக்களை திருத்தம் செய்வதற்கான பொது நாட்குறிப்புச் செம்மையாக்கங்களைத் தருக. (பு 02)

காசுக் கணக்கு							
திகதி	விபரம்	பே.ப	பெறுமதி	திகதி	விபரம்	பே.ப	பெறுமதி
2025.11.01	கொள்வனவுக் கணக்கு		47,000				

கொள்வனவுக் கணக்கு							
திகதி	விபரம்	பே.ப	பெறுமதி	திகதி	விபரம்	பே.ப	பெறுமதி
				2025.11.01	காசுக் கணக்கு		47,000

தளபாடக் கணக்கு							
திகதி	விபரம்	பே.ப	பெறுமதி	திகதி	விபரம்	பே.ப	பெறுமதி
2025.11.08	காசுக் கணக்கு		60,000				

(iv) நிர்மாலின் வணிகத்தின் 2025 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கான வங்கிக் கணக்கின் சாதகமான மீதி ரூ. 73,000 ஆகும். அன்றைய தினத்துக்கான வங்கிக் கூற்றின் மீதி ரூ. 48,000 ஆகக் காணப்பட்டது. வேறுபாட்டுக்கான காரணங்கள் கீழே பின்வருமாறு:

1. வங்கியால் அறவிடப்பட்டுள்ள வங்கிக் கட்டணம் ரூ. 4,000.
2. நிலையான கட்டளை மூலம் செலுத்தப்பட்ட கடன் தவணை ரூ. 12,000.
3. வங்கிக்குச் செலுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படாத 014802 இலக்கமிடப்பட்ட ரூ. 14,000 பெறுமதியான காசோலை.
4. ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்ட 033401 இலக்கமிடப்பட்ட ரூ. 23,000 பெறுமதியான காசோலை வசூலிக்கப்படாமல் இருந்தது.

வேண்டப்படுவது:

(அ) 2025 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கான நிர்மாலின் வணிகத்தின் சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு.

(ஆ) 2025.08.31 ஆம் திகதிக்கான வங்கி கணக்கிணக்கக் கூற்று. (பு 04)

7) (i) அறவிடமுடியாத கடன் என்றால் என்ன? (பு 02)

(ii) கீழே காட்டப்பட்டுள்ளது 'திறன் சக்தி' இளையோர் சங்கத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுக் கணக்கு ஆகும்.

திறன் சக்தி இளையோர் சங்கம்			
2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கணக்கு			
மீதி கீ/கொ/வ.	21,000	கட்டிட வாடகை செலுத்தியது.	10,000
அங்கத்துவக் கட்டணம்.	15,000	உபகரண கொள்வனவு	24,000
நன்கொடைகள்.	14,000	மின் கட்டணம் செலுத்தியது.	8,000
கண்காட்சி வருமானம்.	30,000		
		மீதி கீ/கொ/செ.	38,000
	80,000		**80,000**

மேலதிக தகவல்கள்:

- 8 அங்கத்தவர்கள் 2024 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 1,000 ஆகும்.
- அட்டுறு கட்டட வாடகை ரூ. 2,000 ஆகும்.

வேண்டப்படுவது: 2024.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான 'திறன் சக்தி' இளையோர் சங்கத்தின் வருமானக் கூற்று. (பு 02)

(iii) சசிந்தின் சில்லறை வியாபாரத்தின் 2024.12.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

	வரவு (ரூ)	செலவு (ரூ)
2024.01.01 இருப்புகள்	20,000	
கொண்டு வருதல் செலவுகள்	5,000	
விநியோக வாகனத்தின் கிரயம்	600,000	
விநியோக வாகனத்தின் தேய்மான ஏற்பாடு (2024.01.01)		60,000
வங்கிக் கடன் வட்டி	11,000	
8% வங்கிக் கடன்		200,000
காசு மீதி	18,000	
வங்கிக் மேலதிக பற்று		21,000
பெற்ற கழிவு		4,000
கொடுத்த கழிவு	6,000	
ஊழியர் சம்பளம்	35,000	
மின்சாரக் கட்டணம்	16,000	
விற்பனைகள்		272,000
கொள்வனவுகள்	100,000	
கடன்பட்டோன்	33,000	
கடன்கொடுத்தோன்		11,000
விளம்பரச் செலவு	12,000	
வரிகள்	4,000	
மூலதனம்		300,000
தொலைபேசிக் கட்டணம்	8,000	
மொத்தம்	**868,000**	**868,000**

மேலதிக தகவல்கள்:

- 2024.12.31 ஆம் திகதிக்கான இறுதி இருப்பு ரூ. 34,000 ஆகும்.
- அட்டுறு தொலைபேசிக் கட்டணம் ரூ. 5,000 ஆகும்.
- விநியோக வாகனத்துக்கு நேர் கோட்டு முறைப்படி கிரயத்தில் நேர்கோட்டுமுறைப்படி 10% வீதம் பெறுமானத் தேய்விடுதல் வேண்டும்.

வேண்டப்படுவது:

(அ) சசிந்தின் சில்லறை வியாபாரத்தின் 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று. (பு 04)

(ஆ) 2024.12.31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று. (பு 04)

*****

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank